StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM
## SUMMATIVE ASSESSMENT II - MARCH - 2013

**SUBJECT - TAMIL**
**CLASS - X**

Max. Marks : 90 — Time Allowed : 3 Hours
மொத்த மதிப்பெண்கள் : 90 — கால அளவு : 3 மணி நேரம்

**The question paper is divided into four sections:**
**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | |
|---|---|---|---|
| SECTION : A | Reading comprehension | - | 15 Marks |
| பிரிவு : அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION : B | Writing | - | 20 Marks |
| பிரிவு : ஆ | எழுதுதல் | - | 20 மதிப்பெண்கள் |
| SECTION : C | Grammar | - | 15 Marks |
| பிரிவு : இ | இலக்கணம் | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION : D | Literature/Text Books | - | 40 Marks |
| பிரிவு : ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல் | - | 40 மதிப்பெண்கள் |

<u>குறிப்பு :</u>

- கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
- விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
- வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

## பகுதி - அ

1. கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

சோழர்களின் புகழ் பெற்ற மன்னருள் முதலாம் இராஜராஜன் முதன்மையானவர். கி.பி 985 முதல் கி.பி 1012 வரை சோழ நாட்டைப் பெரும் புகழுடன் ஆட்சி புரிந்தவர். மாமன்னன் இராஜராஜன். இராஜராஜ சோழன் இடைக்கால சோழ மன்னர்களில் மிக உன்னதமானவர். இவர் கி.பி 957 முதல் கி.பி 973 வரை சோழ நாட்டை ஆண்ட சுந்தர சோழனுடைய இரண்டாவது மகனாவார். சுந்தர சோழனுக்கும் சேர நாட்டு வானவன் மாதேவிக்கும் ஐப்பசி திங்கள் சதய நன்னாளில் பிறந்த இவரது இயற்பெயர் "அருண்மொழிவர்மன்". இவர் ஆட்சியின் 3ம் ஆண்டு முதலே ராஜ ராஜ சோழன் எனப்பட்டார் (973) தந்தை இறந்ததும் இவர் உடனடியாகப் பதவிக்கு வரவில்லை. 12 வருடகால உத்தம சோழனின் ஆட்சிக்குப் பின்னரே இவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். விசயாலய சோழன் நிறுவிய சோழ அரசு இவர் காலத்திலும் இவர் மகன் இராஜேந்திர சோழன் காலத்திலும் மிக உயர்நிலை எய்தியது. இராஜராஜனின் காலம் பிற்காலச் சோழர் வரலாற்றில் மட்டுமன்றித் தென்னிந்திய வரலாற்றிலேயே ஒரு பொற்காலமாகும்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

1. இராஜராஜ சோழன் எத்தனை ஆண்டு காலம் சோழநாட்டை ஆட்சி செய்தார்?

அ) 26 ஆண்டுகள் ஆ) 27 ஆண்டுகள் இ) 28 ஆண்டுகள் ஈ) 29 ஆண்டுகள்

2. இராஜ ராஜ சோழனின் இயற்பெயர் யாது?

அ) சுந்தர சோழன் ஆ) இராஜவர்மன் இ) சோழவர்மன் ஈ) அருண்மொழிவர்மன்

3. இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்ட வருடம் எதைக்குறிக்கிறது?

அ) தந்தை இறந்த வருடம் ஆ) ஆட்சிப்பொறுப்பை ஏற்ற வருடம்
இ) பிறந்த வருடம் ஈ) இறந்த வருடம்

4. தென்னிந்திய வரலாற்றின் பொற்காலம் எது?

அ) இராஜேந்திர சோழர் காலம் ஆ) சுந்தர சோழனின் காலம்
இ) இராஜ ராஜ சோழர் காலம் ஈ) சோழர்கள் காலம்

5. உத்தம சோழன் ஆட்சி செய்த காலம்

அ) 957 - 973 ஆ) 973 - 985 இ) 975 - 983 ஈ) 978 - 988

2. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)

நிலநடுக்கம் அல்லது பூகம்பம் என்பது பூமிக்கடியில் அழுத்தம் அதிகமாகி அதனால் சக்தி வெளியேற்றப்பட்டு, தளத்திட்டுகள் நகர்வதனால் இடம்பெறும் அதிர்வைக் குறிக்கும். இந்த அதிர்வு நிலநடுக்கமானியான செய்ஸ்மோமீட்டர் என்ற ரிக்டர் அளவை மூலம் அளக்கப்படுகிறது. 3 ரிக்டருக்கும் குறைவான நிலநடுக்கங்களை உணர்வது கடினமாகும். அதேவேளை 7 ரிக்டருக்கும் கூடுதலான அதிர்வுகள் பலத்த சேதத்தை ஏற்படுத்த வல்லன.
பூமியின் மேற்பரப்பான லித்தோஸ்பியர் பெரும் பாளங்களாக அமைந்துள்ளது. இவை நகரும் தட்டுகளாக இருக்கின்றன. நிலப்பரப்பிலும், நீரின் அடியிலுமாக உள்ள இவற்றில் ஏழு தட்டுகள் மிகப் பெரியதாகவும், குறைந்தது பன்னிரண்டு சிறிய தட்டுகளும் உள்ளன. இந்த ஏழு பெரும் தட்டுகளில் ஐந்து கண்டங்களும் பசிபிக் முதலிய பெருங்கடல் பகுதிகளும் அடக்கும்.

1. நில நடுக்கம் ஏற்படுவதன் காரணம் யாது?

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

2. லித்தோஸ்பியர் பூமியின் எந்தப் பகுதியில் அமைந்துள்ளது?

அ) அடிப்பரப்பில் ஆ) மேற்பரப்பில் இ) நடுவில் ஈ) இடையில்

3. நில அதிர்வு எவ்வாறு கணிக்கப்படுகிறது?

அ) நிலநடுக்கமானி ஆ) தட்பவெப்பநிலை
இ) லித்தோஸ்பியர் ஈ) மேற்பரப்பின் தோற்றம்

4. அதிக சேதத்தை ஏற்படுத்தவல்ல ரிக்டர் அளவு எது?

அ) ஐந்து ஆ) ஏழு இ) மூன்று ஈ) பன்னிரண்டு

5. பெருங்கடலில் அமைந்துள்ள தட்டுகள் யாவை?

அ) பன்னிரண்டு பெரும் தட்டுகள் ஆ) பன்னிரண்டு சிறு தட்டுகள்
இ) ஐந்து பெரும் தட்டுகள் ஈ) ஏழு பெரும் தட்டுகள்

3. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)

வள்ளுவர் கோட்டம், புகழ் பெற்ற திருக்குறள் என்னும் நூலைத் தமிழுக்குத் தந்த சங்ககாலத் தமிழ்ப் புலவரான திருவள்ளுவருக்காகக் கட்டப்பட்டுள்ள ஒரு நினைவகம் ஆகும். இது தமிழ் நாடு மாநிலத் தலைநகரமான சென்னையில், கோடம்பாக்கம் பெருந்தெரு மற்றும் வில்லேஜ் தெருக்கள் சந்திப்புக்கு அண்மையில் அமைந்துள்ளது. இந் நினைவகம், 1976 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இங்கு பலரையும் கவர்வது திருவாரூர்க் கோயிலில் தேரின் மாதிரியில் கட்டப்பட்டுள்ள சிறப்புத் தேர் அமைப்பு ஆகும். இதன் அடிப்பகுதி 25 x 25 அடி (7.5 x 7.5 மீட்டர்) அளவு கொண்ட பளிங்குக் கல்லால் ஆனது. இது 128 அடி (39 மீட்டர்) உயரம் கொண்டது. 7 அடி (2.1 மீட்டர்) உயரமான இரண்டு யானைகள் இத்தேரை இழுப்பது போல அமைக்கப்பட்டுள்ளது. தேரின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொன்றும் தனிக்கல்லில் செதுக்கப்பட்ட நான்கு சக்கரங்கள் காணப்படுகின்றன. கரைகளில் உள்ள சக்கரங்கள் பெரியவை, ஒவ்வொன்றும் 11.25 அடி (3,43 மீட்டர்) குறுக்களவும், 2.5 அடி (0.76 மீட்டர்) தடிப்பும் கொண்டவை. நடுவில் அமைந்துள்ள இரு சக்கரங்களும் சிறியவை.

1. சென்னையில் அமைந்துள்ள திருவள்ளுவருக்கான நினைவகம் யாது?

அ) திருவாரூர்க் கோவில் ஆ) வள்ளுவர் கோட்டம்
இ) வள்ளுவர் சிலை ஈ) கல்வெட்டு

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

2. சிற்பத்தேர் மாதிரியின் அடிப்பகுதி எதனால் கட்டப்பட்டுள்ளது?

அ) கருங்கல் ஆ) பளிங்கு இ) பாறை ஈ) சிமெண்ட்

3. தேரை இழுப்பது போல் அமைந்துள்ள விலங்கு எது?

அ) எருது ஆ) யானை இ) புலி ஈ) குதிரை

4. தேரின் உயரத்தைக் குறிப்பிடுக.

அ) 11.25 அடி ஆ) 125 அடி இ) 7 அடி ஈ) 128 அடி

5. திருவள்ளுவர் எவ்வாறு போற்றப்படுகிறார்?

அ) பாவேந்தர் ஆ) பொய்யாமொழிப்புலவர் இ) கவிமணி ஈ) பண்டிதமணி

## பகுதி - ஆ

4. நீ வசிக்கும் பகுதியில் விளையாட்டுத்திடல் அமைக்க வேண்டி மாநகராட்சிக்கு ஒரு மடல் வரைக. (8)

(அல்லது)

விடுதியில் தங்கிப்படிக்கும் உன் தம்பி/தங்கைக்கு நேரத்தின் முக்கியத்துவம் குறித்து ஒரு கடிதம் வரைக.

(உனது முகவரி பிரேம் / பிரேமா, எண் - 45, மலர் குடியிருப்பு, எழும்பூர், சென்னை - 64 எனக்கொள்க.)

5. ஏதேனும் ஒரு பகுதியில் உள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (8)

அ) சுத்தம் - சுகாதாரம் - சுற்றுப்புறம் - சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு - நடவடிக்கை - நோயற்ற வாழ்வு

ஆ) தேசியக்கவி பாரதி - பிறப்பும் இளமையும் - விடுதலை வேட்கை - முன்னறி புலவர் பாரதி - சமுதாயத்தொண்டு

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

6. உனது ஊரில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள் குறித்து ஒரு அறிக்கை எழுதுக.

(அல்லது)

உனது பள்ளியில் நடைபெற்ற 'முதலுதவி முகாம்' குறித்து ஒரு அறிக்கை எழுதுக.

StudentBounty.com

## பகுதி - இ

7. சான்று தருக (எவையேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) இயல்புப் புணர்ச்சி

அ) வாழைப்பழம் ஆ) பொன்வளையல் இ) பொற்குடம் ஈ) வடமேற்கு

ii) குறிஞ்சி

அ) கிளி ஆ) காட்டுக்கோழி இ) நாரை ஈ) புறா

iii) நிரை கவர்தல்

அ) நொச்சி ஆ) கரந்தை இ) வெட்சி ஈ) வஞ்சி

iv) கூவிளம்

அ) நிரை நிரை ஆ) நிரை நேர் இ) நேர் நிரை ஈ) நேர் நேர்

v) வஞ்சப்புகழ்ச்சி அணி

அ) பழிப்பது போலப் புகழ்தல் ஆ) உவமையைக்கூறிப் பொருளைப் பெற வைத்தல்
இ) தன் குறிப்பை ஏற்றிக் கூறுதல் ஈ) முன்னர் வந்த சொல் மீண்டும் வந்து பொருள் தருதல்

8. நிரப்புக (எவையேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) அகம், புறம் ஆகிய இரண்டும் ________________ ஆகும்.

அ) சொல் இலக்கணம் ஆ) பொருள் இலக்கணம்
இ) வாழ்விலக்கணம் ஈ) புற இலக்கணம்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

ii) சேதாம்பல் ____________ எனப் பிரியும்

அ) சேது + ஆம்பல்
ஆ) செம் + ஆம்பல்
இ) சேம் + ஆம்பல்
ஈ) செம்மை + ஆம்பல்

iii) ஒரு சொல் பிரிவு படாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத்தருவது __________

அ) செம்மொழிச்சிலேடை அணி
ஆ) பிரிமொழிச்சிலேடை அணி
இ) சொல்பின்வரு நிலையணி
ஈ) பொருள் பின்வரு நிலையணி

iv) மூன்றடி சிற்றெல்லையும், பாடும் புலவனின் மனக்கருத்திற்கேற்பப் பல அடிகளைப் பெற்று வருவது _______________

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

v) தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைக் கைப்பற்றுதல் _______

அ) வாகைத்திணை ஆ) உழிஞைத்திணை இ) கரந்தைத் திணை ஈ) நொச்சித்திணை

9. கூரியவாறு செய்க (எவையேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) பெரியன் - புணர்ச்சி எழுதுக.

அ) திசைப்பெயர்ப்புணர்ச்சி
ஆ) மகர ஈற்றுப்புணர்ச்சி
இ) பண்புப் பெயர்ப்புணர்ச்சி
ஈ) இயல்புப் புணர்ச்சி

ii) இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை - சிறு பொழுது கூறுக.

அ) மாலை ஆ) எற்பாடு இ) காலை ஈ) வைகறை

iii) ஆண்மகனின் ஒழுகலாறுகள் - திணை கூறுக.

அ) வெட்சி ஆ) நொச்சி இ) பாடாண் ஈ) வாகை

iv) முதலடியும் ஈற்றடியும் அளவடியாகவும், இடையடிகள் குறளடி, சிந்தடியாகவும் வரும் - பாவகை கூறுக.

அ) அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

v) ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வரும் - அணி கூறுக.

அ) இரட்டுற மொழிதல் அணி
ஆ) தற்குறிப்பேற்ற அணி
இ) பின்வரு நிலையணி
ஈ) பிறிது மொழிதல் அணி

10. இலக்கணக் குறிப்பு தருக (எவையேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) வெற்றிலை

அ) அடி அகரம் ஐ ஆதல்
ஆ) ஆதிநீடல்
இ) இனமிகல்
ஈ) தன்னொற்றிரட்டல்

ii) குரவம், பாதிரி

அ) மருதம் ஆ) முல்லை இ) பாலை ஈ) நெய்தல்

iii) பொருந்தாக் காமம்

அ) பெருந்திணை
ஆ) கைக்கிளைத்திணை
இ) தும்பைத்திணை
ஈ) பொதுவியல் திணை

iv) சிறப்பு

அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

v) ஏற்றுமின் விளக்கை இருளகலவே

அ) சொல்பொருள் பின்வரு நிலையணி
ஆ) பொருள் பின்வரு நிலையணி
இ) செம்மொழிச்சிலேடை அணி
ஈ) பிரிமொழிச்சிலேடை அணி

11. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க (ஏதேனும் மூன்று மட்டும்) 3 X1 = 3

i) அ) கிழக்கு என்னும் திசைப்பெயரோடு 'நாடு' சேரும்போது கிழக்குநாடு எனப்புணரும்.
ஆ) கிழக்கு என்னும் திசைப்பெயரோடு 'நாடு' சேரும்போது கிழநாடு எனப்புணரும்.
இ) கிழக்கு என்னும் திசைப்பெயரோடு 'நாடு' சேரும்போது கீழைநாடு எனப்புணரும்.
ஈ) கிழக்கு என்னும் திசைப்பெயரோடு 'நாடு' சேரும்போது கீழ்நாடு எனப்புணரும்.

ii) அ) அகவொழுக்கம் நிகழ்வதற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.
ஆ) அகவொழுக்கம் நிகழ்வதற்குக் காரணமான நிலமும் பொழுதும் கருப்பொருள் எனப்படும்.
இ) அகவொழுக்கம் நிகழ்வதற்குக் காரணமான நிலமும் பொழுதும் உரிப்பொருள் எனப்படும்.
ஈ) அகவொழுக்கம் நிகழ்வதற்குக் காரணமான நிலமும் பொழுதும் அகத்திணை எனப்படும்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

iii) அ) செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது, சொல்பின்வரு நிலையணி ஆகும்.
ஆ) செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது, பொருள்பின்வரு நிலையணி ஆகும்.
இ) செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது, சொற்பொருள்பின்வரு நிலையணி ஆகும்.
ஈ) செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது, பிறிது மொழிதல் அணி ஆகும்.

iv) அ) வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது இன்னிசை வெண்பா.
ஆ) வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது நேரிசை வெண்பா.
இ) வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது பஃறொடை வெண்பா.
ஈ) வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடி முதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

v) அ) மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக்கருதி போருக்குச் செல்வது தும்பைத்திணை.
ஆ) மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக்கருதி போருக்குச் செல்வது உழிஞைத்திணை.
இ) மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக்கருதி போருக்குச் செல்வது காஞ்சித்திணை.
ஈ) மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக்கருதி போருக்குச் செல்வது வஞ்சித்திணை.

## பகுதி - ஈ

12. கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)

வள்ளலார், இறைவன் ஒருவனே; அவன் ஒளி வடிவினன் என்பதையும அருட்பெருஞ்சோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிப்பொருங்கருணையே கருவி என்பதையும் உலகோர்க்கு உணர்த்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை வடலூரில் நிறுவினார். சாதி, மத, சமய, இனவேறுபாடு கூடாது; எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ண வேண்டும்; ஏழை மக்களின் பசியைப் போக்குதல் வேண்டும்; உலக மக்கள் அனைவரையும் உடன்பிறப்புகளாய் நேசித்தல் வேண்டும் என்பன இச்சங்கத்தின் நோக்கங்களாகும்.

இராமலிங்கர் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் திருவருட்பா என மக்கள் போற்றுகின்றனர். இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவினார். மேலும், மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார். இதனால்தான் பாரதியார் இவரைப் புதுநெறிகண்ட புலவர் என்ற போற்றினார். வள்ளலார் மொழிப்பற்று மிக்கவர்; தமிழ் மொழியே இறவாத நிலை தரும் என்று கருதினார். "பயில்வதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை மிகவும் எளிமையாக அறிவிப்பதாய், திருவருள் வளத்தால் கிடைத்த தென்மொழி

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

i) இராமலிங்கரின் பாடல்கள் மக்களால் எவ்வாறு போற்றப்படுகிறது?

அ) ஞான ஒலி ஆ) மாணிக்கமாலை இ) திருவருட்பா ஈ) அருட்பா

ii) சத்திய ஞான சபை நிறுவப்பட்ட இடம் யாது?

அ) கடலூர் ஆ) சிதம்பரம் இ) மருதூர் ஈ) வடலூர்

iii) வள்ளலார் எந்தமொழி மீது பற்றுக்கொண்டார்?

அ) ஆங்கிலம் ஆ) தமிழ்மொழி இ) சமஸ்கிருதம் ஈ) வடமொழி

iv) இறைவனை அடைவதற்கு தேவையான கருவி யாது?

அ) வழிபாடு ஆ) பற்று இ) கருணை ஈ) சமயம்

v) வள்ளலாரின் வாழ்வினில் நீ அறிந்த உண்மை யாது?

அ) மனித நேயம் ஆ) உயிர்க்கொலை இ) தீண்டாமை ஈ) சாதி வேறுபாடு

13. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதுக. (5)

தமிழ்நாடு தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. முதல் மாந்தன் தோன்றிய இலெமுரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர். தமிழகம் இன்றுபோல் இல்லாது, குமரிமுனைக்குத் தெற்கே இன்னும் விரிந்து, குமரிமலை, பஃளிறு ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது. தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா நனி நாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவுநிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தினர்; உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர்; வினையை ஆடவர் உயிராகக் கருதினர்; சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர்; விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர்; புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர்; பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்; ஈந்து உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

i) முதல் மாந்தன் தோன்றிய இடம் எது?

அ) கிரேக்கம் ஆ) ஆப்ரிக்கா இ) ஸ்ரீலங்கா ஈ) இலெமுரியா

ii) பஃளிறு ஆறு எந்த நாட்டைச் சார்ந்தது?

அ) கர்நாடகா ஆ) தமிழ்நாடு இ) ஈழம் ஈ) ஆந்திரா

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

iii) ஆடவர்க்கு உயிராகக் கருதப்பட்டது யாது?

அ) வினை ஆ) உடை இ) உணவு ஈ) தங்கம்

iv) 'பொறை' என்பதன் பொருள் ____________

அ) புகழ் ஆ) விருந்தோம்பல் இ) சுமை ஈ) பண்பு

v) பழந்தமிழர் வாழ்க்கையில் நீ அறிந்தது என்ன?

அ) உழைப்பற்றவர்கள் ஆ) சோம்பலானவர்கள்
இ) பண்பாடுள்ளவர்கள் ஈ) நாகரீகமற்றவர்கள்

14. கீழ்க்காணும் செய்யுள் வரிகளைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. (4)

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே.

i) 'ஏமாப்போம்' என்பதன் பொருள்

அ) துன்பம் ஆ) பாதுகாப்பு இ) நோய் ஈ) இறைவன்

ii) எதற்கு பயம் இல்லை என்று ஆசிரியர் கூறுகிறார்?

அ) சிங்கம் ஆ) பாம்பு இ) புலி ஈ) எமன்

iii) எவர்க்கும் ஆட்படாத தன்மையுள்ளவர் யார்?

அ) ஆசிரியர் ஆ) சைவ அடியார் இ) சிவபெருமான் ஈ) திருமால்

iv) இப்பாடல் இடம் பெற்ற செய்யுளின் பெயர்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

15. விடையளிக்க (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2

அ) கடல் வாணிகம் மற்றும் உழவுத் தொழில் குறித்து எழுதுக.

ஆ) தமிழன் அறிவியல் முன்னோடி என்பதை விளக்குக.

இ) காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

ஈ) இராமலிங்களின் உயிரிரக்கம் பற்றிய கருத்துக்களை எழுதுக.

உ) கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க.

16. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க. 2 x 4 = 8

அ) நிற்க நேரமில்லை பாடல் மூலம் இளந்திரையன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

ஆ) தமிழ்விடு தூது பகுதியால் அறியப்படும் செய்தி யாது?

இ) வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

ஈ) பெரியாரைத் துணை கொள்வதன் இலக்கணம், அதனால் வரும் சிறப்பு, பெரியார் துணையில்லாத வழி ஏற்படும் இழிவு ஆகியன குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

17. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 x 8 = 8

அ) தொல்லியல் துறை பற்றி எழுதுக.

ஆ) இலிண்ட்கிரென் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

இ) தமிழகத்தில் நூலகத்துறையின் வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

>>>>>>>>><<<<<<<<<

www.StudentBounty.com
Homework Help & Pastpapers